தெற்கில் உதித்த திராவிடச் சூரியன்!

மேற்குலகில் பொதுவுடமைச் சூரியன் அஸ்தமித்த போது, தென்னகத்தில் ஒரு திராவிடச் சூரியன் உதயமானது! அத்திராவிடக் கொழுந்துக்கு மறைந்த பொதுவுடமைக்காரரின் பெயரிட்டு உச்சி முகர்ந்தார் முத்தமிழ் அறிஞர்!

பால்ய பருவத்திலேயே அரசியல் பாடம்!

பதின்ம வயதில் 'கோபாலபுரம் இளைஞர் திமுக!'

தந்தையே தலைவரானார்! இல்லமே பாசறையானது! அன்றோ அவசரநிலைக் காலத்தில் மிசா கைதி! இன்றோ ஆரிய அடக்குமுறைக்கு எதிரான கலகத்தீ! ஹேஷ்யங்களையும் ஜோசியங்களையும் தவிடு பொடியாக்கி அரியணை ஏறினார்!

சமத்துவம், சமூக நீதி, சாதி ஒழிப்பு, பகுத்தறிவை தன் அரியணையின் நான்கு கால்களாக்கினார்!

மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை, கூட்டுறவு வங்கி நகைக்கடன் ரத்து, வேளாண்மைக்கென சிறப்பு நிதிநிலை அறிக்கை என சொன்னதை செய்த முதல்வர்!

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம்,கலைஞர் கனவு இல்லம் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், வறுமை ஒழிப்புக்கு ரூ.25,972 கோடியில் முதலமைச்சரின் தாயுமானவர் என்ற பெயரில் புதிய திட்டம் என தனது மாபெரும் தமிழ்க்கனவையும் வெளிப்படுத்தி கல்விக்கு மட்டும் ரூ.50 ஆயிரம் கோடிகளுக்கும் மேல் நிதி ஒதுக்கீடு செய்து தான் சொல்லாததையும் செய்து காட்டியுள்ளார்! அவர் தம் தரணி போற்றும் திராவிட மாடல் ஆட்சிக்கு இன்னொரு கலிங்கத்துப்பரணி பாடினும் தகுமே!

கழக உடன் பிறப்புகளே! 2024-ஆம் ஆண்டு என்பது சமகால உலக வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டாகும். உலகத் தலைமைகள் மாற்றம் காண உள்ள அதி முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். உலகம் கொரோனாவில் இருந்து விடுபட்ட பிறகு வல்லாதிக்க நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் இவ்வாண்டு பொதுத் தேர்தலை சந்திக்க உள்ளன. ஏறக்குறைய உலக மக்கள் தொகையில் 50% பேர் வாக்களிக்க உள்ளனர். இது போன்று இதற்கு முன்பு மனித குல வரலாற்றில் நடந்தது இல்லை.

எதிர்வரும் மக்களவை தேர்தல் என்பது இந்தியாவின் ஜனநாயக சக்திகளுக்கான அக்னிப்பரீட்சை.

10 ஆண்டுகளாக இந்தியாவை இருளில் தள்ளி, மத நல்லிணக்கத்திற்கு வேட்டு வைத்து இந்திய அரசமைப்புச் சட்டத்தை கேலிக் கூத்தாக்கிய பாசிசத்தை பா.ஜ.க. ஆட்சியைக் வேரறுக்க படை திரட்டியுள்ளார் நம் தளபதியார்.

இந்தியா கூட்டணியை கட்டமைத்து இந்தியாவின் விடியல் தென்னகத்தில் விடியும் என்று சூளுரைத்துள்ளார். தளபதியாரின் கட்டளையை ஏற்று மதவாத சக்திகளை இந்தியாவில் இருந்து விரட்டி அடிக்க வேண்டிய வரலாற்று கடமை நம் முன் உள்ளது. தமிழகத்தை பொருத்தவரை 40/40 என்பது திண்ணம். ஆனால் அவ்வெற்றி மகத்தான வெற்றியாக எதிரிகளுக்கான சம்மட்டி அடியாக இருக்க வேண்டும்.

முத்தான மூன்றாண்டுகளுக்குப் பிறகும் கழக உடன் பிறப்புகளின் செவிகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது அந்த ஒற்றை வரி! 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான்!' வாழ்க நீ எம்மான்!

இன்று பிறந்தநாள் காணும் எங்கள் இனமான தளபதியாருக்கு 40/40 என்னும் வெற்றிக்கனியை பிறந்த நாள் பரிசாக அளித்திட கழக உடன்பிறப்புகள் சபதமேற்போம்! உரிமைகளை மீட்க ஸ்டாலின் குரல் திக்கெட்டும் ஒலிக்கட்டும்!

நாற்பதும் நமதே!
நாளையும் நமதே!
என்றும் கழகத்தலைவர் வழியில்!

முனைவர் பி.பழனியப்பன்
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்

நாமும் வாழ்த்துகிறோம்! அவர்களும் வாழ்த்துகிறார்கள்!!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து!

சென்னை, மார்ச் 1 -

"நானும் வாழ்த்துகிறோம், அவர்களும் வாழ்த்துகிறாரகள்" என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவடர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

நாளை (1-3-2024) நமது 'திராவிட மாடல்' ஆட்சியான தி.மு.க. ஆட்சியின் முதலமைச்சர் மானமிகு, மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் பெருவிழா!

இது வெறும் கட்சி விழாவாகவோ, அதிகாரவர்க்க விழாவாகவோ அல்லாமல், மக்கள் மகிழ்ந்து கொண்டாடும் மக்கள் விழாவாக இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அயலகத்தில் உள்ள நம் மக்கள் உள்பட அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்குடன் கொண்டாடுகிறார்கள்.

காரணம், அவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மாமனிதர் செயற்கரிய செய்து நாளும் மக்களின் இதயச் சிம்மாசனத்தில் இடம்பெறுபவராக ஆகிவருகிறார்! உள்ளத்தில் பொய்யாது ஒழுகுகிறார்!

அதன் காரணமாக, உலகத்தாரின் உள்ளத்தில் பாசத்துடன் இடம்பிடித்து தமது ஆட்சியை, வெறும் காட்சியாக அமைக்காமல் ஒடுக்கப்பட்ட கோடானு கோடி மக்கள் மக்கள் தொகையில் சரி பகுதி உள்ள பெண்கள் "கல்வி பெற கதியில்லையே, காரணம் நம்மை வறுமை வாட்டுகிறதே; வாழ்வாதார வயிற்றுக் கஞ்சிக்கே வகை தேடித் திரியும் நிலையில், எப்படி நம் பிள்ளைகளைப் படிக்க வைப்பது!" என்று ஏங்கிய மக்களின் பிள்ளைகளுக்கு முந்தைய பகல் உணவு, சத்துணவு தாண்டி, காலைச் சிற்றுண்டியும் தந்து, ஒரு கல்விப் புரட்சியை அமைதிப் புரட்சியாக்கி இந்தியாவிற்கே வழிகாட்டும் கல்வி வள்ளலாகி, கவலை போக்கும் காவல் ஆட்சித் தலைவராக நின்று, "ஆளும் இதயத்தை அன்பு நதியினில் நனைத்து ஆளும் நம் முதலமைச்சரை" அவர்களும் நாளும் வாழ்த்துகின்றனர்!

"அய்யகோ, எங்கள் பெண் குழந்தைகள் உயர்கல்வியைப் பெற ஆசைப்பட்டும், அதைப் பெற்றுத் தரும் வசதி எம்மிடம் இல்லையே" என்று வருந்தி, கசிந்துருகி, கண்ணீர் விட்ட பெற்றோர் தங்கள் கண்ணீரைத் துடைத்து, "என்ன, மாதந்தோறும் ஆயிரம் ரூபாயா? அதுவும் எனது குடும்பத்திலிருந்து கல்லூரிக்குச் செல்லும் மூன்று பிள்ளைகளுக்கும் கூடவா?" என்று வியப்பின் விளிம்பில் நின்று இப்போது மகிழ்ச்சிக் கண்ணீர் வழிகிறது!

"நாளெல்லாம் வீட்டில் மாடென உழைத்தும், அடுப்புப் புகையும், அவலக் கண்ணீரும் தானே நமக்கு மிஞ்சியது! அக்கம் பக்கத்தில் வாங்கிய கடனைக்கூட அடைக்க வழியில்லையே, மானம் காக்க நாம் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறுவழியில்லையே" என்று கண்ணீரும், கம்பலையுமாய் இருந்த ஏழைக் குடும்பத் தலைவிக்கு, "மாதாமாதம் 1000 ரூபாய் வந்து வீட்டுக் கதவைத் தட்டுகிறதே" என்று உவகை பொங்கும் உள்ளத்தோடு உலவும் தாய்மார்களான அவர்களும் வாழ்த்துகிறார்கள்!

புதிய புதிய தொழில் முதலீடுகளைத் தேடி, நாடிச் சென்றும், உலகத்தோரை இந்த 'அமைதிப் பூங்கா'வாம் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைத்து, வேதனையின் உச்சத்தில், வருந்திய விரக்தியில், வேலை கிட்டா ஆயிரக்கணக்கான நம் இளைஞர்களுக்குப் புதிய புதிய தொழில் வாய்ப்புகள் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்று கிடைத்த மகிழ்ச்சியினால்.

அவர்களும் வாழ்த்துகிறார்கள்!

சமூகநீதிக்காகப் போராட்டக் களத்தில் களமாடிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை என்பதை நாளும் செயல்படுத்தி, அதற்கான வழிமுறை சட்டங்கள், ஆணைகள், ஆணைய அமைப்புகளோடு இட ஒதுக்கீடு சரியாக செயல்படுகிறதா என்று கண்காணிக்கும் குழுவை நியமித்து, ஆய்வு செய்து, பிறகு ஆவன நடவடிக்கைக்கு ஆணை பிறப்பித்தல், சமூகநீதி இவ்வாட்சியில் வெறும் 'ஏட்டுச் சுரைக்காய்' அல்ல நிதர்சனமான உண்மை என்பதை உணர்ந்து, பயன்பெறும் பல்லாயிரம் தமிழ்நாட்டு இளைஞர்கள், படித்து வேலை வாய்ப்பற்று இருந்தவர்களுக்குக் கதவு திறக்கப்பட்டது.

இவ்வளவு செய்ய, நமக்குரிய நிதியை ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசு தராமல் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர் மாவட்டங்களின் மழை வெள்ளக் கொடுமைக்கான நிவாரணத்தைக்கூட ஒரு ரூபாய் அளவில்கூடத் தராமல் ஈரமற்ற இதயத்தோடு, "தமிழ்நாடு அரசு எப்படி நடக்கிறது, பார்க்கிறோம்" என்று நிதிக் குரல்வளையைப் பிடித்து வஞ்சித்தாலும், தமது பொறுமையும், பொறுப்பும் அமைந்த அவரது அணுகுமுறையால், "எதிர் நீச்சலிலும் எப்போதும் வெற்றி பெறுவேன். அது எனது தலைவர்களான பெரியார், அண்ணா, கலைஞரிடம் நான் கற்ற துணிச்சலின் அணுகுமுறை" என்பதை வழிமுறையாகக் காட்டி, கோபம் நிறைந்த வேகம் காட்டவேண்டிய தருணத்தில் கூட பொறுமையுடன், "விவேகமே வெற்றி தரும்" என்ற தனது ராஜதந்திரம் (Statesmanship) மூலம், மலையாய் வந்த சோதனைகளைப் பனியாய் உருகிப் போகச் செய்து, அவர் ஆளும் நேர்மை, நேர்த்தியைச் சான்றோர்களான பொது மனிதர்களும் பாராட்டுகிறார்கள்!

ஆம் அவர்களும் வாழ்த்துகிறார்கள்!

இப்படி மாமழையெனக் குவியும் வாழ்த்துகளையும் கண்டு அவர் உற்சாகமாகியுள்ளார்!

வசவுகளைக் கண்டு மேலும் உழைக்க உறுதிமேல் உறுதி கொண்டு, உழைப்பின் உருவமாக உலா வருகிறார்!

"கடமையாற்றிக் காலத்தை வெல்லும்" எங்கள் காவலரே, முதல்வரே, வாழி! வாழி!! பல்லாண்டு நலமுடன் வாழி, என்று நாமும் வாழ்த்துகிறோம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் கூறியுள்ளார்.

எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமை! இரா.துரைராஜ் - மா.அன்பரசன் - எம்.ஸ்ரீதர் முன்னிலை!

சைதை மேற்கில் கழகத் தலைவர் பிறந்தநாள் வாழ்த்தரங்கம்!

திருச்சி சிவா எம்.பி. - அருள்மொழி - மதிமாறன் - ஈரோடு சத்தியவதி- நாகலட்சுமி சிறப்புரை!

சென்னை, மார்ச் 1 -

சைதை மேற்குபகுதி தி.மு.க சார்பில் கழகதலைவர் தமிழக முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு சைதாப்பேட்டை தேரடி திடலில் நாளை 02.03.2024 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது. வாழ்த்தரங்கத்தை மவாட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்க உள்ளார். திருச்சி என்.சிவா எம்.பி., வழக்கறிஞர் அருள்மொழி, மதிமாறன், ஈரோடு சத்யவதி, நாகலெட்சுமி, ஆகியோர் திராவிடமாடல் - தேசத்தின் விடியல் என்ற வாழ்த்தரங்கத்தை வாசிக்க உள்ளனர்.

இந்நிகழ்வில் கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., முன்னிலையிலும் பகுதி கழகநிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு. சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், ஆகியோர் வரவேற்க உள்ளனர். முனைவர்தமிழச்சித்தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த்ரமேஷ், ஏஎம்வி. பிரபாகர்ராஜா, காரப்பாக்கம் க.கணபதி, மாவட்டநிர்வாகிகள் எஸ். குணசேகரன், க.தனசேகரன்எம்.சி, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரிபி.மணிமாறன் எம்.சி., காசிமுத்து மாணிக்கம், பாலவாக்கம்விஸ்வநாதன்எம்.சி, பாலவாக்கம்மனோகரன், வேளச்சேரிபாஸ்கர்எம்.சி, வாசுகிபாண்டியன், பகுதிகழக ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன்எம்.சி., மு.இராசாஎம்.சி., எஸ்.வி.ரவிச்சந்திரன்எம்.சி., வி.மதியழகன்எம்.சி., சு.சேகர், துரைகபிலன், நொளம்பூர்வே.ராஜன், கோவிலம்பாக்கம்ஜி. வெங்கடேசன், அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதைசம்பத், மின்னல்கந்தப்பன், மேடவாக்கம்ப.ரவி, எம்.கே. ஏழுமலை, உதுரைராஜ், எஸ்.டி. தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.அரிகிருஷ்ணன், ரா.பாலசுந்தரம், அடையார்பாஸ்கர், வ.செல்வகுமார், த.பஷீர், வீ. கனிமொழி, மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், எம்.எஸ்.ஹரிபாபு, நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ. பாஸ்கர், ப.அருண்குமார், வே.ஆனந்தம் எம்.சி., சி.பரிமேலழகர், கழக ரமேஷ், ம.பார்த்திபன், சி.சுரேஷ், ஆர்.சசிகுமார், குமரேசன், வி.ராஜேஷ், கனிமொழி, நிஷாசையத், ஜகதீசன், அனிஷ், முகேஷ்கண்ணன், வி.ஜெயச்சந்திரன், எஸ்.பி.அருண், இளைஞர் அணியின் மாவட்ட துணைஅமைப்பாளர்கள் ஆர். கிருஷ்ணகுமார், எம்.விநாயகமூர்த்தி, கோட்டூர்பிரகாஷ், சங்கர்கணேஷ் எம்.சி., இ.பாண்டியன், வி.தியாகராஜன், செ.ரவி, கிழக்கு பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, வட்டகழக செயலாளர்கள் தா.மோகன்குமார் எம்.சி., எல். ஆரோக்கியராஜ், மு.இராஜா, கோட்டூர் க.முனி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ். பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், ந. ராதாகிருஷ்ணன், மாவட்டபிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டி செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ. மதிவாணன், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு, டி.வி.நரசிம்மன், எஸ்.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.சலாம், க.உமாபதி, வே.முருகன், ஜி. யோவான், இரா.சுதாபிரியன், ந.பாபு, மு.மகேஷ், எஸ்.கணேசன், ஜி.செல்வராஜ், வே. ரமேஷ்குமார், ஏ.மஜித், எஸ். ரவி உள்ளிட்ட அனைத்து அணி களின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள், கழக செயல்வீரரர்கள், வீராங்கணைகள், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எம்.நாகா, எஸ்.பி.கோதண்டம் நன்றிகூறயுள்ளனர்.

லயன் எஸ்.ஜி.மாதவன் ஏற்பாட்டில் ரமணி மாதவன் தலைமையில்

மதுரவாயல் 147 வது வட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றி நலஉதவிகள் - உணவு!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ - நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்கின்றனர்!

சென்னை, மார்ச். 1

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்ட தி.மு.க. முழுவதும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் வட்டக் கழகத்தில் இன்று (1.3.2024 வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணியளவில் ஆலப்பாக்கம் நார்ச்சந்தியில் மாவட்ட கழக பிரதிநிதி க.பிருந்தாவனம் ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

8.00 மணி அளவில் அஷ்டலட்சுமிநகர் போலீஸ் பூத் அருகில் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அஷ்டலட்சுமி நகரில் பி.கோபிநாத், பகுதிப் பிரதிநிதி டி.ஜெயமுருகன் ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 8.30 மணி அளவில் கிருஷ்ணா நகர் தீன் மஹால் தளபதி ஆட்டோ ஸ்டாண்டில் கழகக் கொடி ஏற்றி ஆட்டோ ஓட்டுனருக்கு சீருடை வழங்கப்படுகிறது. 9.00 மணி அளவில் சீமாத்தம்மன் நகரில் வட்ட துணைச் செயலாளர் தமயந்தி இளங்கோ ஏற்பாட்டில் 1000 மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கப்படுகிறது. 9.30 மணி அளவில் மாவட்ட கழகப் பிரதிநிதி ஜி.குப்புசாமி, வட்ட மகளிர் அணி அமைப்பாளர் வச்சலா ஏற்பாட்டில் நீர் மோர் தண்ணீர் பந்தல் மற்றும் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 10.00 மணி அளவில் வட்டக் கழகத் துணைச் செயலாளர் எஸ்.முருகன், டி.சுரேஷ் ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி 500 நபருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது. 10.30 மணி அளவில் கார்த்திகேயன் நகர் நார்ச்சந்தியில் பகுதி பிரதிநிதி டி.ராஜன் மற்றும் நாகேந்திரன் ஏற்பாட்டில் நீர்மோர் பந்தல் திறந்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்படுகிறது. 11.00 மணி அளவில் ஜானகி நகர் நார்ச் சந்தியில் ஜானகி நகர் திலீப், ராஜா, காளிதாஸ் ஆகியோர் ஏற்பாட்டில் கழகக் கொடியேற்றி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 11.30 மணி அளவில் வட்ட துணைச் செயலாளர் ஆனந்தகுமார் ஏற்பாட்டில் 500 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது. 12.00 மணி அளவில் ஆலப்பாக்கம் ஸ்ரீதேவி நகரில் பகுதி கலை இலக்கிய அணி அமைப்பாளர் உதயம் வேணு, ரவிக்குமார் அவர்கள் ஏற்பாட்டில் 500 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது. 12.30 மணி அளவில் ஆலப்பாக்கம் பிருந்தாவனம் காப்பகத்தில் செந்தில்குமார் ஏற்பாட்டில் முதியவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. மதியம் 1.00 மணி அளவில் கங்கா நகர் அரசு பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், பென்சில், பேனா, இனிப்பு ஆகியவை 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் எம்.சி., வட்டக் கழக அவைத் தலைவர் எஸ். வெங்கடேச பெருமாள் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. மதியம் 1.30 மணி அளவில் முன்னாள் வட்ட துணைச் செயலாளர் வி.வெங்கடேசன் ஏற்பாட்டில் 500 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மேனாள் கவுன்சிலர், 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் ஏற்பாட்டில் சென்னை மாநகராட்சி கல்விக்குழு உறுப்பினர், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் தலைமையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, வளசரவாக்கம் 11 வது மண்டலக்குழுத் தலைவர், நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர். இந்நிகழ்ச்சிகளில் வட்டத்திற்குட்பட்ட கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பி க்கின்றனர்.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்து பிற இடங்களுக்கும் - பிற இடங்களிலிருந்து

கிளாம்பாக்கத்திற்கு பேருந்துகளில் 4 மணி நேரத்திற்குள் பயணம் செய்யும் திட்டம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 1 -

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், நேற்று (29.02.2024), தலைமைச் செயலகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கான மொபைல் செயலி மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் ரூ.40/ கூடுதலாக செலுத்தி கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்து பிற இடங்களுக்கும், பிற இடங்களில் இருந்து கிளாம்பாக்கத்திற்கும் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 4 மணி நேரத்திற்குள் பயணம் செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், நேற்று (29.02.2024), தலைமைச் செயலகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கான மொபைல் செயலி மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் ரூ.40/ கூடுதலாக செலுத்தி கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்து பிற இடங்களுக்கும், பிற இடங்களில் இருந்து கிளாம்பாக்கத்திற்கும் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 4 மணி நேரத்திற்குள் பயணம் செய்யும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

மாநகர் போக்குவரத்து கழக பணியாளர்களுக்கான செயலியின் வாயிலாக, நிர்வாகத்தின் மூலமாக வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு செய்திகளை பணியாளர்கள் அறிந்து கொள்ளவும், பணியாளர்கள் விடுப்பு எடுத்திட விண்ணப்பித்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் முன்பதிவு செய்யும் பயணிகள், ரூ.40/ கூடுதலாக கட்டணம் செலுத்தும் பட்சத்தில், கால விரையமின்றி, கிளாம்பாக்கத்தில் இருந்து சென்னையின் பல்வேறு இடங்களுக்கும், சென்னையின் பல்வேறு இடங்களில் இருந்து கிளாம்பாக்கத்திற்கும், 4 மணி நேரத்திற்குள், 2, 3 மாநகர் போக்குவரத்து கழக பேருந்துகளில் பயணம் செய்து தாங்கள் செல்லும் இடத்தை விரைவாக அடையும் வகையில் இத்திட்டம் இன்று (01.03.2024) முதல் செயல்படுத்தப்பட உள்ளது.

இவ்விழாவின் போது, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் இரா. மோகன், மா.போ.க. இணை மேலாண் இயக்குநர் க.குணசேகரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

முதல்வர் பிறந்த நாள்: தியாகராயர் மேற்குப் பகுதி

132அ வட்டத்தில் உணவு வழங்கல்!

வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கை

சென்னை,மார்ச் 1 -

தியாகராய நகர் மேற்கு பகுதி 132 அ வட்ட ச் செயலாளர் கே. எஸ். வெல்டிங் ராஜா விடுத்துள்ள அறிக்கை:

தமிழர் எழுச்சி நாள் மார்ச் 1 ல் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா ஜெ.கருணாநிதி.மே எம்.எல்.ஏ. பகுதிச் செயலாளர் கே ஏழுமலை திருமதி பா கார்த்திகா பாஸ்கர் ஆகியோர் மருத்துவ முகாம் மற்றும் கழக கொடி ஏற்றி அறுசுவை உணவு மற்றும் இனிப்பு வழங்கி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

கே.செந்தில், பா. முரளி பெஸ்ட் ரவிச்சந்திரன் தலைமையில் ரங்கராஜபுரம் பிரதான நாகார்ஜுனா 1வது தெரு சந்திப்பில் அஷயா சுரேஷ்குமார், G.ஹரி நாராயண் கீதாஞ்சலி V.சேகர், J.சுதாகர், C.கோபிநாத், G.சிவகுமார், C.சக்திவேல் ஆகியோர் தலைமையில் ரங்கராஜபுரம் 60 குடிசை பகுதியில் நிகழ்ச்சி நடைபெறுகிறது மேலும் பல்வேறு இடங்களில் கழக கொடி யேற்றி, இனிப்பு உணவு வழங்கி கொண்டாடப்படு கிறது. இதில் வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிள், அனைத்து அணி களின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல்வீ ரர்கள் கலந்துகொள்ளுமாறு கே.எஸ். வெல்டிங்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

முதல்வர் பிறந்த நாளையொட்டி

133-வது வட்டத்தில் உணவு வழங்கல்!

மயிலை த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியன், ஜெ.கருணாநிதி, கே .ஏழுமலை பங்கேற்பு

சென்னை, மார்ச் 1 -

தியாகராயநகர் 133வது வட்டத்தில் கழகத்தலைவர் பிறந்தநாளையொட்டி வட்டச்செயலாளர் பி.ஜெயகுமார் தலைமையில் ராஜீப்பிள்ளை தோட்டம், ஆனந்தன் தெரு முத்துரெட்டி தோட்டம் ஆகிய இடங்களில் உணவு வழங்கும் நிகழ்ச்சி காலை 9.00 மணியளவில் நடைபெறுகிறது இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் மயிலை தா.வேலு எம். எல்.ஏ, பி.மாரி, பா. பா. சுரேஷ் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் கழக நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்ட கழக செயலாளர் பி. ஜெயகுமார் கேட்டு கொள்கிறார்.

சென்னை துறைமுக L.P.F. தி.மு.க.தொழிற்சங்க இண பொதுச்செயலாளர் A. ஜான் பிரிட்டோ அவர்களின் பணி நிறைவு நிகழ்வு துறைமுக கழக அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார். நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், துறைமுக தொ.மு.ச. பொதுசெயலாளர் பி.இராமமூர்த்தி, இணைப் பொதுச் செயலாளர்கள் எஸ்.அமல்சிங், எம்.ஏ. கஸ்தூரி ரங்கநாதன், வி.சிவபிரகாசம், பொருளாளர் ஏ.சிவஞானம் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பலகுரலரசு 'மிசா' முருகுபாண்டியன்
மார்ச் 1 (2016)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் பணியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957இல் 'உதயசூரியன் நாடக மன்ற'த்தை தஞ்சையில் தொடங்கி 1000க்கும் மேற்பட்ட நாடகங்களையும், 40,000க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியவர்.

கழக மாநாடுகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போது பலகுரலில் பேசியதை கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு "பலகுரலரசு" எனும் பட்டம் அளித்து பாராட்டினார்..

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

"கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் என்னைவிட்டு எங்கும் செல்லாமல், எல்லா சோதனைகளின் போதும், வேதனைகளின் போதும் என்னுடனே இரு